தோற்றம் : 1971 அறிந்தேற்பு : 341/1980

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

(Recognized by the Govt. of Tamilnadu G.O.No. 341, Dt.22.03.1980)

TAMILNADU GOVERNMENT COLLEGE TEACHERS' ASSOCIATION

TNGCTA நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. Ph: 28516573 Telefax: 28414354

## மாநில ஆட்சிக் குழுத் தேர்தல் 2013–2015

தேர்தல் சுற்றறிக்கை–3 நாள்: 23.07.2014

தோழர்களே/தோழியரே!

வணக்கம். 22.07.2014 அன்று நடைபெற்ற மாநில ஆட்சிக்குழுவின் முடிவின்படி, 13.07.2014 அன்று திருச்சியில் நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்ட மாநில ஆட்சிக்குழுவிற்கான தேர்தலை 27.07.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று நடத்திடுமாறு மாநிலத் தேர்தல் குழுவை, ஆட்சிக்குழு கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் தேர்தல் அட்டவணை பின்வருமாறு திட்டமிடலாகிறது.

தலைவர், துணைத் தலைவர் (பொது), துணைத் தலைவர் (மகளிர்), பொதுச் செயலர் மற்றும் இணைச் செயலர் (பொது), ஆகிய பொறுப்புகளுக்கு தலா ஒரு வேட்புமனு மட்டுமே பெறப்பட்டதால், இப்பொறுப்புகளுக்கு போட்டியிட்டோர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், இணைச் செயலர் (மகளிர்), மற்றும் பொருளர் ஆகிய இரண்டு பொறுப்புகளுக்கு மட்டும் கீழ்க்கண்ட அட்டவணைப்படி வாக்குப் பதிவு நடைபெறும் என்றும் அறிவிக்கலாகிறது.

### வாக்குப் பதிவு

| | |
|---|---|
| வாக்குப்பதிவு நடைபெறுமிடம் | ஜமால் முகமது கல்லூரி, திருச்சி |
| வாக்குப் பதிவு நாள் | 27.07.2014 ஞாயிற்றுக்கிழமை |
| வாக்குப் பதிவு நேரம் | காலை 9.30 மணி முதல் – 2.30 மணி வரை |
| வாக்கு எண்ணிக்கை | பிற்பகல் 3.00 மணி |
| தேர்தல் முடிவுகள் அறிவிப்பு | வாக்கு எண்ணிக்கை முடிந்தவுடன் |
| புதிய ஆட்சிக்குழு பொறுப்பேற்பு | மாலை 4.15 மணிக்கு நடைபெறும் பொதுக் குழுவில் |

### தேர்தல் விதிமுறைகள்:

1. 22.06.2014 அன்று சென்னையில் நடைபெற்ற மாநிலச் செயற்குழு முடிவின்படி, திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் (இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது) இடம்பெற்றுள்ள வாக்காளர்கள் மட்டுமே மாநிலத் தேர்தலில் வாக்களிக்க முடியும். அவருக்கு மாற்றாக வேறொருவர் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.
2. கிளை வாக்காளர்கள் கிளைச் செயலராலும், மண்டல வாக்காளர்கள் மண்டலச் செயலராலும் சான்றொப்பமிட்ட அடையாளச் சீட்டினை வாக்களிக்க வரும்போது கட்டாயமாகக் கொண்டு வருதல் வேண்டும். அடையாள சீட்டு இல்லாவிட்டால் வாக்களிக்க முடியாது.
3. அஞ்சல்முறை வாக்களிப்புக் கிடையாது.

மாநிலத் தேர்தல் சிறப்பாக நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டுகிறோம்.

இவண்,

**மாநிலத் தேர்தல் குழு,**

**பேரா. அ. ஜோசப் துரை**
உறுப்பினர்
மாநிலக் கல்லூரி,
சென்னை– 5.

**பேரா. ந. செல்வராஜ்**
அமைப்பாளர்
அரசு கலைக் கல்லூரி,
குளித்தலை.

**பேரா. கு. நடராஜன்**
உறுப்பினர்
அரசு கலைக் கல்லூரி
நாமக்கல்